| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி)<br>பாண்டிச்சேரி / காரைக்கால். |

ந.க.எண். 012452/எப்3/2024 நாள் : 24.08.2024

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலைத் தேர்வு கல்வியாண்டு (2024 – 2025) – முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு – புதிய தேர்வுமையங்கள் அமைத்தல் – கருத்துரு அனுப்புதல் தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

**பார்வை :** அரசாணை (1டி) எண்.602, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.11.10.2017.

******

2024–2025ம் கல்வி ஆண்டு மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுக்குரிய புதிய தேர்வு மையங்கள் அமைத்தல் தொடர்பான கருத்துருக்களை கீழ்க்குறிப்பிட்ட அறிவுரைகளைப் பின்பற்றி அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து நடப்பு கல்வியாண்டு 2024–2025 மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான புதிய தேர்வு மையங்கள் கோரும் கருத்துருக்களை அனுப்பி வைக்கக் கோரி பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். அதன்பின் பள்ளிகளிலிருந்து பெறப்படும் கருத்துருவினைப் பரிசீலினை செய்து, அப்பள்ளிகளை நேரில் பார்வையிட்டு பிற்சேர்க்கை ‘அ’ மற்றும் ‘ஆ’ ஆகியவற்றை பூர்த்தி செய்து கருத்துருவினை அனுப்புதல் வேண்டும்.

புதிய தேர்வு மையங்கள் கோரி கருத்துரு அனுப்பப்படும்பொழுது, திட்டவட்டமான தங்களது குறிப்புரையுடன் கருத்துரு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பப்பட்ட புதிய தேர்வு மையங்கள் குறித்த விவரங்களை மந்தணமாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

மேலும், 2024 மேல்நிலைத் தேர்விற்காக ஓராண்டிற்கு மட்டும் தேர்வு மையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட பள்ளிகள் தொடர்ந்து தேர்வுமையமாக செயல்பட வேண்டும் எனில் மீண்டும் கருத்துரு அனுப்பி, இயக்குநரின் ஆணை பெறவேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது. எக்காரணங்கொண்டும் கருத்துருவினை பழைய படிவங்களில் பூர்த்தி செய்து அனுப்புதல் கூடாது.

சம்பந்தப்பட்ட பள்ளியை நேரில் ஆய்வு செய்த பின், அவசியம் தேர்வு மையமாக அமைத்தே ஆக வேண்டும் என்பதற்கான காரணத்தை விளக்கி பரிந்துரைத்து அனுப்புதல் வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையின்றி பெறப்படும் கருத்துருக்கள் மற்றும் உரிய காலக்கெடுவிற்குப் பின் பெறப்படும் கருத்துருக்கள் ஆகியவை கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

புதிய தேர்வு மையங்கள் அமைக்க பரிந்துரைக்கப்படும் பள்ளிகள் இத்துடன் இணைத்தனுப்பப்படும் அரசாணையில் உள்ள விதிகளின்படி தேர்வு மையங்களாக செயல்பட தகுதியுள்ளதை உறுதி செய்த பின் பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறு பரிந்துரை செய்யப்படும் பள்ளிகள் பற்றிய அனைத்து விவரங்களையும் இத்துடன் அனுப்பப்படும் பிற்சேர்க்கை 'அ' மற்றும் 'ஆ' வில் சரியான முறையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அரசாணையில் உள்ள விதிகளின்படி இல்லாத பள்ளிகளைத் தேர்வு மையம் வேண்டி பரிந்துரை செய்து அனுப்பப்படும் அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மேலிடத்திற்குப் பரிந்துரை செய்யப்படும் என அறிவிக்கலாகிறது. 10 கி.மீ. தூரத்திற்கு மேல் பயணம் செய்து தேர்வெழுத தேர்வு மையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் பயிலும் அரசுப் பள்ளிகளில் புதிய தேர்வு மையங்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பரிந்துரை செய்யப்படும் புதிய தேர்வு மையங்கள் ஏதும் இல்லை எனில் 'இன்மை அறிக்கை' அனுப்புதல் வேண்டும்.

தற்பொழுது தேர்வு மையங்களாக செயல்படும் மையங்களில், இரத்து செய்யப்பட வேண்டிய தேர்வு மையங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை உரிய காரணங்களுடன் பட்டியலிட்டு படிவம் I–ல் பூர்த்தி செய்தும், அங்கீகாரம் / தொடர் அங்கீகாரம் இல்லாமல் நீதிமன்ற ஆணையின் மூலம் தொடர்ந்து மேல்நிலைத் தேர்வெழுதி வரும் பள்ளிகளின் பட்டியலை படிவம் II–ல் பூர்த்தி செய்தும் அனுப்புதல் வேண்டும். நடப்பு கல்வியாண்டு **2023–2024** பொதுத்தேர்விற்கு ஏற்கெனவே தேர்வுமையமாக செயல்பட்டு வரும் பள்ளிகள் / புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் தேர்வுமையமாக செயல்பட அனுமதிக்கப்படமாட்டாது.

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட புதிய தேர்வு மையம் கோரும் கருத்துருக்களையும், (பிற்சேர்க்கை 'அ' , 'ஆ') மேற்குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களையும் (Format I&II) தங்கள் அலுவலகத்தில் தேர்வுபணியில் ஈடுபட்டுள்ள இருக்கை எழுத்தர் (Examination Clerk) மூலம் **09.09.2024** அன்று காலை **10.30** மணிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் அறிவுரைகளை தவறாது பின்பற்றி தேவைப்படும் விவரங்கள் அனைத்தையும் **09.09.2024** அன்று சமர்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**2024– 2025**ஆம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான முன்னிலைப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு புதிய தேர்வுமையம் கருத்துவினை மேற்குறிப்பிடப்பட்ட தேதிக்குள் தவறாது அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :** அரசாணை, பிற்சேர்க்கை ‘அ’, ‘ஆ’
மற்றும் படிவங்கள் I&II

**ஒம்/–**
**இயக்குநர்**

**மேல்நிலை பொதுத் தேர்வு, கல்வியாண்டு 2024–2025**

**பிற்சேர்க்கை – ‘அ’**

**புதிய தேர்வு மையம் – கோரும் விண்ணப்பம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியின் எண் & பெயர் | | |
| 2. | அங்கீகாரம் நடப்புக் கல்வியாண்டிற்கு உள்ளது என்பதற்கான ஆணை நகல் இணைக்கப்பட்ட வேண்டும். | | |
| 3. | நடப்புக் கல்வி ஆண்டிற்கான (ஏப்ரல் 2025 வரை) கட்டிட உறுதி மற்றும் உரிமச்சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும். | | |
| 4. | வருவாய் மாவட்டம் | | |
| 5. | கல்வி மாவட்டம் | | |
| 6. | அ) நகர்புற பள்ளி / கிராமப்புற பள்ளி | | |
| | ஆ) அரசுப்பள்ளி / தனியார் பள்ளி / சுயநிதி பள்ளி | | |
| 7. | பள்ளியின் முழு முகவரி (அஞ்சல் குறியிட்டு எண்ணுடன்) | | |
| 8. | பள்ளியின் தொலைபேசி எண். | | |
| 9. | பள்ளியில் பயிலும் +1 மற்றும் +2 மாணவர்களின் எண்ணிக்கை (2024– 2025) | +1 வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | +2 வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை |
| | ஆண் | | |
| | பெண் | | |
| | மொத்தம் | | |
| 10. | இட வசதி (மாணவர்கள் எண்ணிக்கையில்) | | |
| 11. | இருக்கை வசதி (மாணவர்கள் எண்ணிக்கையில்) | | |
| 12. | பள்ளியிலுள்ள மொத்த வகுப்பறைகள் | | |
| 13. | மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான அனைத்து வசதிகளும் (இருக்கை, கழிவறை போன்ற வசதிகள்) உள்ளனவா? | | |

| | | |
|---|---|---|
| 14. | தேர்வு மையத்திற்கு பரிந்துரைக்கப்படும் பள்ளியின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தேர்வுப் பணியில் ஈடுபடும் அனைவரது உயிர் மற்றும் உடமைகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய அமைப்புகள் ஏதும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதா? | |
| 15. | தேர்வு நடைபெறும் சமயத்தில் கட்டிடப் பணி ஏதும் நடைபெறும் சூழல் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதா ? | |
| 16. | பத்தாம் வகுப்பு தேர்வு மையமாக எந்த ஆண்டிலிருந்து செயல்படுகிறது? | |
| 17. | இப்பள்ளியில் 2024 ம் கல்வியாண்டில் மேல்நிலைத் தேர்வு மையத்தின் எண், பெயர் மற்றும் (இணைப்புப் பள்ளிகளுடன் சேர்த்து) மாணவர்களின் எண்ணிகை விவரம் (பழைய தேர்வுமைய தலைமையாசிரியரின் தடையின்மைச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| **வ. எண்** | **தேர்வு மையம் / இணைப்பு பள்ளியின் பெயர்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
| | | |
| 18. | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிக்கும், அப்பள்ளி 2024 மேல்நிலைத் தேர்விற்கு இணைக்கப்பட்ட மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் | |
| 19. | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ள இணைப்புப் பள்ளிகள் விவரம் (இணைப்பு பள்ளி தலைமை ஆசிரியரின் இசைவுக் கடிதம் இணைக்கப்பட வேண்டும்) | |

| இணைப்பு பள்ளியின் பெயர் | நடப்புக் கல்வி ஆண்டில் +1 மற்றும் +2 பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | | ஏற்கனவே தேர்வெழுதிய மையத்தின் (+2) பெயர் மற்றும் மைய எண் | பழைய தேர்வு மையத்தில் மார்ச் 2024–ல் (+2) இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர் மற்றும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | பழைய மையத்தின் தூரம் | தற்போது இணைக்கப்படும் மையத்திற்கிடையே உள்ள தூரம் |
|---|---|---|---|---|---|---|
| | +1 | +2 | | | | |
| | | | | | | |

| | | |
|---|---|---|
| 20. | புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டால், அப்பள்ளி ஏற்கனவே +2 தேர்வெழுதிய பழைய தேர்வு மையத்தில் கல்வியாண்டு 2024–2025–ல் மேல்நிலைத் தேர்வினை எழுதும் மாணவர்களின் விவரம் (பள்ளி வாரியாக) | |
| **வ. எண்** | **தேர்வு மையம் / இணைப்பு பள்ளியின் பெயர்** | **மாணவர்களின் எண்ணிக்கை** |
| | | |
| 21. | தலைமையாசிரியரின் குறிப்புரை (கையொப்பத்துடன்) | |
| 22. | முதன்மைக் கல்வி அலுவலரால் புதிய தேர்வுமையம் கோரும் பள்ளி பார்வையிடப்பட்ட நாள் | |
| 23. | புதிய தேர்வு மையம் அமைக்க முதன்மைக் கல்வி அலுவலர் பரிந்துரைப்பதற்கான காரணம் | |

**முதன்மைக் கல்வி அலுவலரின்**
**கையொப்பம்**

## மேல்நிலைத் பொதுத்தேர்வு, கல்வியாண்டு (2024 – 2025)

### பிற்சேர்க்கை – ‘ஆ’

**வருவாய் மாவட்டத்தின் பெயர் :** **கல்வி மாவட்ட எண் & பெயர்**

| வ. எ ண் | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியின் பெயர், பள்ளி விவரம் (அரசு/தனியார் /சுயநிதி) மற்றும் பள்ளி அமைவிடம் (கிராமம் / நகரம்/ மலைப்பகுதி) | இட வசதி / இருக்கை வசதி | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியில் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை | | | | புதிய தேர்வு மையத்துடன் இணைக்கப்படும் | | | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளி மார்ச் 2024–ல் | | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிக்கும், பழைய தேர்வு மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் | புதிய தேர்வு மையம் கோருவதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வகுப்பு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | பள்ளிகளின் பெயர் | +1 மற்றும் +2 மாணவர்களின் எண்ணிக்கை | மையத்திற்கும், இணைப்பு பள்ளி / பள்ளிகளுக்கும் இடையேயான தூரம் | இணைக்கப்பட்ட மையத்தின் பெயர் | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை (இணைப்புப் பள்ளிகள் உட்பட) | | |
| | | | +1 | | | | | | | | | | |
| | | | +2 | | | | | | | | | | |

**முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம்**

# Format – I

# Higher Secondary Examination – 2025

# Existing Centre's to be closed

| S.No | Centre No. & Name of the Centre to be Closed | | Reason for Closing |
|---|---|---|---|
| | Centre No. | Name | |
| | | | |

CHIEF EDUCATIONAL OFFICER

**Format – II**

**Higher Secondary Examination – 2025**

**List of schools which are not recognized and awaiting renewal of recognition but always sending students for examinations by virtue of court orders obtained at the last moment or based on orders of Director of Matriculation Schools, Chennai-6 or Director of School Education, Chennai-6**

| S.NO | NAME OF THE SCHOOL | | NAME OF THE CENTRE IN WHICH STUDENTS WROTE THE EXAMINATION IN THE PREVIOUS YEAR | | DETAILS OF COURT ORDER OBTAINED LAST YEAR (ENCLOSE A COPY) | DETAILS OF RECOMMENDATION ORDERS OF DMS – DSE WITH NO. & DATE |
|---|---|---|---|---|---|---|
| | SCHOOL NO. | NAME | SCHOOL NO | NAME | | |
| | | | | | | |